இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 11.08.2026

# தி.மு.க.வுக்கு அறிவுரை சொல்லத் தேவையில்லை!

தொகுதி மறுவரையறை தொடர்பாக முதலமைச்சர் விஜய் கலந்து கொண்ட கூட்டத்தில் தி.மு.க. கலந்து கொள்ளவில்லையாம். உடனே, மெத்தப் படித்த மேதாவிகள் சிலர் தி.மு.க.வுக்கு அறிவுரை சொல்லக் கிளம்பி இருக்கிறார்கள்.

**தி.மு.க. தான் இந்தப் பிரச்சினையை தமிழ்நாட்டிற்கு எடுத்துச் சொல்லிய கட்சி. தென் மாநிலங்களையே எச்சரிக்கை செய்த கட்சி. எனவே, தி.மு.க.வுக்கு யாரும் அறிவுரை சொல்லத் தேவையில்லை.**

தொகுதி மறுவரையறை தொடர்பாக 5.3.2025 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார்கள். விஜய்யையும் ஒரு கட்சித் தலைவராக மதித்து அழைப்பு விடுத்திருந்தார்கள். அந்தக் கூட்டத்துக்கு விஜய்யும் கலந்து கொள்ளவில்லை. அவர் கட்சியைச் சேர்ந்த யாரையும் கலந்து கொள்ளச் சொல்லவும் இல்லை. தமிழ்நாடு தனது எதிர்ப்பை தொகுதி மறுவரையறை விவகாரத்தில் பதிவு செய்து கொண்டிருந்த போது விஜய், கோலம் போட்டு விளையாடிக் கொண்டு இருந்தார்.

அதை விட முக்கியமான 5.3.2025 அன்று அவர் ஒரு அறிக்கை வெளியிட்டார். 'நாடாளுமன்றத் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாகத் தமிழக வெற்றிக் கழகத்தின் நிலைப்பாடு' என்ற தலைப்பில் அந்த அறிக்கை வெளியானது.' **"நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் பற்றாக்குறை என்பது ஒரு மக்கள் பிரச்சினையே இல்லை. அதைவிட மிக முக்கியமான ஜனநாயகம் சார்ந்த பிரச்சினைகள் நாட்டில் இருப்பதை நான் கீழே விவரித்து இருக்கிறேன். அவற்றைக் களைவதுதான் நம் முதன்மைப் பணியாக இருக்க வேண்டும்"** என்று அறிக்கை விட்டவர் எதற்காக இன்று அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்?

**இப்போது அது மக்கள் பிரச்சினை ஆகிவிட்டதா? அல்லது அதை விட மிக முக்கியமான ஜனநாயகப் பிரச்சினைகள் அனைத்தையும் விஜய் தீர்த்து வைத்துவிட்டாரா?**

காவிரிப் பிரச்சினையை திசை திருப்புவதற்காக, கர்நாடகாவை ஆளும் காங்கிரஸ் கட்சியைக் காப்பாற்றுவதற்காக இப்படி ஒரு ஆலோசனைக் கூட்ட நாடகத்தை விஜய் நடத்துகிறார். விஜயை நடத்த வைத்திருக்கிறார்கள். இதில் எதற்காக தி.மு.க. கலந்து கொள்ள வேண்டும்?

இந்த நாடகத்தை தி.மு.க. மட்டுமல்ல; அ.தி.மு.க.வும் புரிந்து கொண்டது. பா.ம.க.வும், தே.மு.தி.க.வும், ம.நீ.க.வும் புரிந்து கொண்டது. அதனால் தான் விஜய் கூட்டிய ஓரங்க நாடகத்தைப் பார்க்க அவர்களும் செல்லவில்லை.

**விஜய் நடத்திய கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்பதற்காக அதில் தி.மு.க. மாறுபட்ட நிலைப்பாடு எடுக்கப் போகிறது என்று பொருளல்ல. விஜய்க்கு அந்தக் கூட்டத்தை நடத்துவதற்கான எந்த யோக்கியதையும் இல்லை என்பதுதான் பொருள்.**

5.3.2025 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தி தொகுதி மறுவரையறைக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். இதில் தென் மாநிலங்கள் அதிகம் பாதிக்கப்படும் என்பதை உணர்ந்து 7 தென் மாநில முதலமைச்சர்களுக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதினார்கள். இதை மையமாக வைத்து நாடாளுமன்றத்தில் தி.மு.க. எம்.பி.க்கள் முழக்கம் எழுப்பினார்கள்.

22.3.2025 அன்று மறுவரையறையை முறைப்படுத்தும் முதல் கூட்டத்தை தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒருங்கிணைத்தார்கள். பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மாநிலக் கட்சிகள் இதில் பங்கேற்றன. பிரதமரைச் சந்திக்க உடனடியாக கடிதம் எழுதினார் அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

தமிழ்நாட்டில் சட்டமன்றத் தேர்தல் நடக்க இருக்கும் நிலையில் இம்மசோதா நாடாளுமன்றத்தில் கொண்டுவர இருப்பதை அறிந்து, 16.4.2026 அன்று கருப்புச் சட்டை அணிந்து, கருப்புக் கொடி ஏந்திச் சென்று போராட்டம் நடத்தினார் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.தொகுதி மறுவரையறை சட்ட மசோதாவின் நகலை எரித்தார். மாநிலம் முழுவதும் தி.மு.க.வினரும் அப்போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

இப்படி 2025 2026 ஆண்டில் தொகுதி மறுவரையறையை முறைப்படுத்த, தமிழ்நாட்டுக்கு பாதிப்பு இல்லாமல் செயல்படுத்த எச்சரிக்கை விடுக்கும் வகையில் அனைத்தையும் செய்தது தி.மு.க. இதனை தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல, தென் மாநில முதலமைச்சர்கள், அகில இந்தியத் தலைவர்கள் அனைவரும் அறிவார்கள். விஜய்க்குத் தெரியவில்லை. தெரியாது.

தென் மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில் உரையாற்றிய அன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், **"ஜனநாயகப் பிரதிநிதித்துவத்தை வலுப்படுத்தும் எந்தவொரு நடவடிக்கையையும் நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் அந்த நடவடிக்கையானது நியாயமான அரசியல் பிரதிநிதித்துவத்தை பாதிக்கக்கூடாது என்று தான் சொல்கிறோம்.இந்தப் போராட்டம், எல்லை வரையறைக்கு எதிரானது அல்ல. இந்தப் போராட்டம் நியாயமான எல்லை வரையறையை வலியுறுத்துகி**றது" என்று குறிப்பிட்டார்கள்.

"This fight is not against delimitation.

This fight is for fair delimitation" என்று குறிப்பிட்டார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். இவை அனைத்தும் பல மாதங்களுக்கு முன்பே தெளிவு படுத்தப்பட்ட கருத்துகள் ஆகும். எனவே, இந்தப் பிரச்சினையை இப்போதுதான் கண்டுபிடித்தவர்களைப் போல யாரும் கருத்துச் சொல்லத் தேவையில்லை.

**41 பேர் மரணத்துக்கு காரணமான கரூர் சம்பவத்தை சி.பி.ஐ. விசாரிப்பதாலும், பல்வேறு வருமான வரி வழக்குகளாலும் பா.ஜ.க. என்ற பெயரையே உச்சரிக்கப் பயந்து கொண்டு இருப்பவர் முதலமைச்சர் விஜய். அவரது ஆட்சிக்கு இரண்டு உறுப்பினர்களைக் கொண்டு முட்டுக் கொடுத்து வருகிறது காங்கிரஸ் கட்சி. எனவே கர்நாடகாவை ஆளும் காங்கிரஸ் ஆட்சியையும் அவரால் பகைத்துக் கொள்ள முடியாது. எனவே தான் காங்கிரஸ் இழுப்புக்காக ஒரு கூட்டத்தைப் போடுகிறார். அங்கும் பா.ஜ.க.வை பகைத்துக் கொள்ளாமல் தீர்மானம் போடுகிறார். வெளியே வந்துவிட்டதால் சாலையில் 10 நிமிடங்கள் நடக்கிறார். கை காட்டுகிறார். அவ்வளவுதான். இன்றைய கால்ஷீட் முடிந்தது. வீட்டுக்குள் போய் விடுகிறார். இன்றைய ரீல்ஸ் தேறுகிறது. இதைத்தான் தமிழ்நாடு பார்த்துக் கொண்டிருக்கிறது.**

••

திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பின் மூலம் நடைபெற்று வரும் பணிகளை முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு எம்.எல்.ஏ. பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மேற்பார்வையாளர்கள் இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், இல.குணசேகரன், எஸ்.கண்ணதாசன், கு.கணேஷ் உட்பட பலர் உள்ளனர்.



## பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ.முன்னிலை! பி.கே.மூர்த்தி தலைமை!

# அம்பத்தூர் பகுதியில் கலைஞர் நினைவுநாள் மாபெரும் புகழரங்கம்!

## டி.ஆர்.பாலு எம்.பி. துவக்கி வைக்கிறார்! எ.வ.வேலு எம்.எல்.ஏ. – கவிஞர்கள் பா.விஜய் - சினேகன் புகழுரை!

*சென்னை, ஆக. 11 -*

சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் தெற்கு பகுதியில் போராளி ஓய்வதில்லை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளையொட்டி மாபெரும் மாபெரும் புகழரங்கம் போராளி 4 "சமத்துவம் செய்த தமிழ் தலைவர்! சரித்திரம் படைத்த நம் கலைஞர்"!!

எனும் தலைப்பில் நாளை (12.08.26 - புதன் கிழமை) மாலை 6.00 மணி அளவில் சென்னை, பாடியாதவா தெருவில் தலைமை செயற்குழு உறுப்பினர், ஏழாவது மண்டல குழு தலைவர் பி.கே.மூர்த்தி தலைமையில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர்பாபு, பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜோசப் சாமுவேல், டி.எஸ்.பி. ராஜகோபால் எம்.சி.

எம்.டி.ஆர்.நாகராஜ், டாக்டர் ஏ.பி. பூர்ணிமா எம்.சி., எல்.பி.எஃப். மோகன் டாக்டர் ஜி.சாந்த குமாரி எம்.சி.,

பி.ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி., ஜெ.பாலமுருகன், ஜி.வி.நாகவள்ளி எம்.சி., கு.கிருஷ்ணமூர்த்தி, து. ஆயிரம், மூ.நடராஜன், து. செல்வராஜ், ஆர்.கதிரவன், எஸ்.கவிதா, செல்லதுரை, கு.சங்கர், ஆர்.திராவிடர் செல்வம், க.முரளி பாபு, க.கதீஜா, மா.ரமேஷ், து. ஜெகநாதன், பி.ஆர்.இளங்கோவன், பா.பொற்செழியன், ரா. லட்சுமி ரங்கசாமி, மேனாம்பேடு இ.ராமு ஆகியோர் முன்னிலையில்,

சி.சீனிவாசன், எம்.இ. சேகர், நா.நெப்போலியன், இரா.டீக்கா, வே.இரவிநீதிரன், ப.வீரா (எ) வீரராகவன், வெ. ராதாகிருஷ்ணன், மு.இரகு, த. கண்ணபிரான், எம் கமல்.எம்.சி, மு சண்முகம், ஆ.சுந்தர்ராஜ், சீ லோகநாதன்" சு மோகன் குமார், மு.விஜயகுமார், த.வ.லால், எஸ்.உமா, கே.பொற்கொடி உஷா நாகராஜ், எம்.சி ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் புகழரங்கத்தை கழகப் பொருளாளர் டி ஆர் பாலு துவக்கி வைக்க தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சி கொறடா எ.வ வேலு.எம்.எல்.ஏ, திரைப்பட இயக்குனர், நடிகர், பாடலாசிரியர் கவிஞர் பா விஜய் , மக்கள் நீதி மய்யம் மாநில இளைஞர் அணித் செயலாளர் கவிஞர் சினேகன் ஆகியோர் புகழுரைக்கின்றனர்.

மேலும் இப்புகழரங்கத்தில் மேயர் பிரியா ராஜன் சன் முனியாண்டி, அ. வெற்றி அழகன், ப.ரங்கநாதன், கே எஸ் ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா,கார்த்திக் மோகன், எஸ் மணி முடி, வே.உமாகாந்த், பி கே மூர்த்தி, கே எஸ் எம். நாதன், கே சந்துரு, சி. மகேஷ் குமார்,ஆர்.வரதன், தேடல்.புருஷோத்தமன், மாவட்ட நிர்வாகிகள் கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி எம் தேவன்,புனிதவதி எத்திராஜன்,இசட் ஆசாத், பகுதி கழகச் செயலாளர்கள் கூ.பீ.ஜெயின், வே வாசு, ஐசிஎப்.வ.முரளிதரன், எ நாகராஜன், செ. தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, சொ.வேலு, வி.சுதாகர், எஸ் ராஜசேகர், எஸ்.முரளி, பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பன்னீர்செல்வம், டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன்,கோ.மணி, எம்.பி.உதயசங்கர், சரிதா மகேஷ்குமார், எம்.இப்ராஹீம் கனி, இரா.கலைச்செல்வி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் வானவில் விஜய், க. வினோத், எஸ் தனசேகர், பா ஜெகதீஷ், ஜி.ஜே.பிரபு, ஆர்.டி. சங்கர் நானா, நா. ரஞ்சித் விஜயா லயன், ஜி. தாமோதரன், நா. துலுக்கானம், கு.கிருஷ்ணமூர்த்தி, பி.ஸ்ரீராமுலு, பி. விஜயகுமார், பா.பிரதீப் குமார், எல்.சம்பத்குமார், எம்.விநாயகம், ஆர்.எஸ். சித்திக், இரா.வீரமணி, ம. அசோக்குமார், எம்.விநாயகம், எம்.பெரோஸ்கான், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் மற்றும் கழக நிர்வாகிகள் செயல்வீரர்கள் முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

இப்புகழரங்கத்தில் த.பிரகாஷ்குமார் நன்றி கூறுகிறார்.

## பழைய ஓய்வூதியமா? புதிய ஓய்வூதியமா?

# ஓய்வூதிய நிதி குறைப்பு அதிர்ச்சியளிக்கிறது!

## தலைமைச் செயலகச் சங்கம் கொதிப்பு!

சென்னை, ஆக. 11 -

அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஓய்வூதியம், ஓய்வூதிய காலப் பலன்களுக்கான நிதி ஒதுக்கீட்டை பட்ஜெட் டில் ரூ.14,003.32 கோடி குறைத்திருப்பதுதன் மூலம் பழைய ஓய்வூதியத்தை அல்லது உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டத்தை அரசு அமல்படுத்துமா? என்பதை தமிழக அரசு விளக்க வேண்டும் என்று தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக அந்தச் சங்கத்தின் தலைவர் வெங்கடேசன் கூறுகையில், '2026-27ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட நிதிநிலை அறிக் கையில், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், பணிக் கொடை உள்ளிட்ட பல்வேறு ஓய்வூதியப் பிரிவுகளுக்கான ஒதுக்கீடு, இடைக்கால நிதிநிலை அறிக்கையுடன் ஒப்பிடும்போது மொத்தம் ரூ.14,003.32 கோடி குறைக்கப்பட்டுள்ளது.

ஆட்சி மாற்றத்துக்குப் பிறகு, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பழைய ஓய் வூதியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என த.வெ.க. அரசு உறுதியளித்திருந்ததை எதிர்பார்த்திருந்த நிலையில், ஓய்வூதிய நிதி ஒதுக்கீடு குறைக்கப்பட்டிருப்பது பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக, முந்தைய தி.மு.க .அரசால் அறிவிக்கப்பட்ட உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்துக்கான அரசின் ஆண்டு ஒதுக்கீடு ரூ.11,000 கோடி முழுமையாக ரத்து செய்யப்பட்டுள்ளது. பிற ஓய்வூதியப் பிரிவுகளிலும் சுமார் ரூ.3,000 கோடி குறைக்கப்பட்டுள்ளது.

இதனால் பழைய ஓய்வூதியத்தை அரசு நடைமுறைப்படுத்தப் போகிறதா அல்லது புதிய ஓய் வூதியத்தை செயல்படுத்த உள்ளதா அல்லது உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்துக்கான நிதி ரத்து செய்யப்பட்டுள்ளதால், அரசு ஊழியர்களின் ஓய்வூதிய வயது 62 ஆக அதிகரிக்குமா என்ற பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன. எனவே, ஓய்வூதிய நிதி ஒதுக்கீடு ரூ.14,000 கோடி குறைக்கப்பட்டதற்கான விளக்கத்தை சட்டப்பேரவையில் தமிழக அரசு அளிக்க வேண்டும். மேலும், அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நீண்டகால கோரிக்கையான பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்து அறிவிப்பு வெளியிட வேண்டும். இது தொடர்பாக முதல்வர் ஜோசப் விஜய்க்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது' என்று தெரிவித்தார்.





முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, மீஞ்சூர் பேரூர்க் கழகத்தின் சார்பில், மீஞ்சூர் பேரூர்க் கழகச் செயலாளர் க.சு.தமிழ் உதயன் ஏற்பாட்டில், திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் முன்னிலையில், திருஉருவப் படத்தை திறந்துவைத்து, 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார்கள். இந்நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் பகலவன், பொதுக்குழு உறுப்பினர்சுப்பிரமணி, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கோதண்டம், மீஞ்சூர் பேரூர் அவைத்தலைவர் ராஜேந்திரன், பொருளாளர் லெனின், கழக மூத்த முன்னோடிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மீஞ்சூர் பேரூர் கிளை கழக செயலாளர்கள், மன்ற உறுப்பினர்கள், BLA–2, BDA, BLC, இந்நாள் மற்றும் முன்னாள் நிர்வாகிகள், வியாபாரி சங்க நிர்வாகிகள், பொதுமக்கள் என திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.